**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 43/2020**
**Deposition of Witness for : PW.1**

**Name** : திருமதி அமுதா
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18-02-2021.**

முதல் விசாரணை -

நான் தற்போது நெடுங்காவாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். சாட்சி வடிவேல் என் சின்னம்மாவின் மருமகன், ஏழுமலை என் பங்காளியின் மகன், குப்பு எனது மாமியார், ரேணு என்னுடைய பங்காளி, சாட்சி கோகிலாகவுண்டர் ஊர்காரர். ஆஜர் எதிரி ஜெயபாலை தெரியும். என் கணவர் பெயர் ராஜன். எனக்கு லதா மற்றும் செல்வி என்ற இரண்டு மகள்கள் உள்ளனர். சுமார் 2 ஆண்டுகள் முன்பு நிலம் வாங்குவதற்காக ரூ.6 லட்சம் பணத்தை ஆஜர் எதிரியிடம் எனது கணவர் கொடுத்தார். மீண்டும் புதியதாக பத்திரம் எழுதிக்கொள்ளலாம் என்று சொல்லி மேலும் கிரைய தொகை 1 லட்சம் ரூபாயை ஆஜர் எதிரி கேட்டார். அதனால் மீண்டும் 1 லட்சம் பணத்தை என் கணவர் எதிரியிடம் கொடுத்தார். பின்னிட்டு பத்திர அலுவலகம் சென்று புதியதாக பத்திரம் எழுதி பதிவு செய்ய போகும்போது ஆஜர் எதிரி பத்திரத்தை கிரையம் செய்து கொடுக்காமல் ஓடிவிட்டார். பணத்தையும் பெற்றுக்கொண்டு, பத்திரமும் எழுதிதராததால் எதிரி மீது நடவடிக்கை வேண்டி சாத்தனூர் டேம் காவல் நிலையத்தில் என் கணவர் புகார் அளித்தார். காவல் நிலையத்தில் சி.எஸ்.ஆர் ரசீது கொடுத்தார்கள். போலீசார் விசாரணையின் போது ஆஜர் எதிரி ரூ.7 லட்சத்தை என் கணவரிடம் கொடுத்து விட்டதாக சொன்னார். மறுபடியும் என் கணவர் திருவண்ணாமலை காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார். அதனால் மீண்டும் என் கணவர் தண்டராம்பட்டு பத்திர பதிவு அலுவலகத்தில் கட்டாய பதிவு செய்து தரும்படி மனு அளித்தார். அதனால் என் கணவருக்கும், ஆஜர் எதிரிக்கும் விரோதம் ஏற்பட்டது. 24.4.2018ம் தேதி காலை 5.30 மணியளவில் நானும் என்

கணவரும் நிலத்திற்கு சென்றுகொண்டிருந்தோம். அப்போது என் கணவர் முன்னே சென்றார் நான் பின்னே சென்றேன். அப்போது ஆஜர் எதிரி வலது புறத்தில் இருந்து வந்து இரும்பு பைப்பால் என் கணவரின் பின்னந்தலையில் அடித்து விட்டார். என்னிடம் தற்போது காட்டப்படும் பைப்பை கொண்டு தான் என் கணவரை எதிரி அடித்தார். அந்த இரும்பு பைப் சா.பொ.1. உடனே என் கணவர் தடுமாறி கீழே விழுந்துவிட்டார். நான் சத்தம்போட்டேன். எதிரி தன் கையில் வைத்திருந்த கொடுவாளால் என் கணவரின் கழுத்தில் வெட்டினார். நான் மறுபடியும் சத்தம் போட்டபோது எதிரி அங்கிருந்து ஓடிவிட்டார். என்னிடம் தற்போது காட்டப்படும் கொடுவாளால் தான் எதிரி என் கணவரை வெட்டினார். அந்த கொடுவாள் சா.பொ.2. என்னுடைய சத்தம் கேட்டு அருகில் இருந்த ஏழுமலை, மற்றும் அங்கிருந்தவர்கள் அனைவரும் ஓடிவந்தார். எதிரி என் கணவரை வெட்டும் போது வெட்டாதே விட்டுவிடு என்று நான் கூறியதற்கு உன்னையும் வெட்டிவிடுவேன் தேவிடியா ஓடி போ என்று கூறினார். நான் பயந்து ஓடி மறைந்து கொண்டேன். நான் சாத்தனூர் டேம் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். ஆஜர் எதிரி என் கணவரை வெட்டியதாக புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1. புகாரை நான் சொல்ல சொல்ல என்னுடன் வந்த நபர் எழுதி என்னிடம் படித்து காண்பித்தார். அதன் பிறகு நான் புகாரில் கையெழுத்து போட்டேன். பிறகு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து என் கணவரின் பிரேதத்தை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தார்கள். மருத்துவமனையில் என் கணவரின் பிரேதத்தை பரிசோதனை செய்து எங்களிடம் ஒப்படைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை- இல்லை</u>

ஒம்/- அமுதா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.